சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.27.04.2026

SC.NO.204/2019

PW 4 : (Lw6) குணசேகரன் (வயது 67 ) த/பெ.முத்து நல்லப்பரெட்டியார்

(2,4 முதல் 6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது கொணலை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சென்னை மெயின்ரோட்டில் கொணலை கிராமத்தில் NSR coffe என்ற டீ கடை நடத்தி வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகஜரில் உள்ள கையெழுத்தை 06.09.2014 ஆம் தேதி மதியம் சிறுகனூர் காவல் நிலையத்திலிருந்து மதியம் 1.30, 2.00 மணியளவில் காவலர் என் கடை அருகில் வந்து, அன்றைய தினம் காலையில் ஈச்சர் வண்டியிலிருந்து மாருதி வண்டிக்கு பெட்டிகளை மாற்றினார்கள் என்று கேள்விபட்டது சம்மந்தமாக அந்த இடத்தை போலிசார் பார்வையிட்டு வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்ததில் இது சம்மந்தமாக என்னை சாட்சியாக இருக்கும்படி போலிசார் கேட்டுக்கொண்டதால் நானும் அதில் சாட்சியாக கையொப்பம் இட்டேன். என்னுடன் மற்றொருவர் கையொப்பம் இட்டார் அவா் பெயர் தெரியவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்டதில் என்னென்ன எழுதி இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், படித்து காட்டினார்கள். சம்பவ சமயத்தில் நான் கடை வைத்திருக்கும் காம்பக்ஸில் பொது மக்கள் நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் ஆமாம். பெட்டி நிறைய மாற்றினார்கள் என்று நான் கூறியுள்ள சாட்சியம் கேள்விபட்ட சாட்சியம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து பார்வை மகஜர் எதுவும் தயார் செய்யவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு, சம்பவ இடத்தில்

பார்வை மகஜரில் கையொப்பம் போட்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/signed/
குணசேகரன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.04.27 19:20:22 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி

சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.27.04.2026

SC.NO.204/2019

PW 5 : (Lw8) கிருஷ்ணமூர்த்தி (வயது 63 ) த/பெ.தேவராயர்

(2,4 முதல் 6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் கொணலை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கொணலை கிராமத்தில் உள்ள NSR ஹோட்டல் மற்றும் அதனுடன் இணைந்த பார்க்கிங்கில் வாட்ச்மேனாக பணிபுரிகிறேன். 06.09.2017 ஆம் தேதி காலை 7 மணியளவில் NSR பார்க்கிங் உள்ளே ஈச்சர் லாரி ஒன்று நின்றது. நான் அதை சென்று பார்த்தேன். அதில் அட்டை பெட்டிகளாக இருந்தன. ஒரு பத்து நிமிடத்தில் வெள்ளை நிற ஆம்னிவேன் ஈச்சர் வண்டி அருகே வந்து நின்றது. ஈச்சர் வண்டியில் 3 பேரும் ஆம்னி வேனில் 3 பேரும் இருந்தார்கள்.

ஈச்சர் வண்டியில் இருந்த அட்டை பெட்டிகளை ஆம்னி வேனிற்கு ஏற்றினார்கள். அப்போது திருவெறும்பூர் மதுவிலக்கு போலிசார் வேன் வந்தது. வேனை பார்த்ததும் 3 பேர் ஓடிவிட்டார்கள். 3 பேரை போலிசார் பிடித்துக்கொண்டார்கள். 3 பேரையும் கைது செய்தும் மற்றும் 2 வாகனங்களை பறிமுதல் செய்தும் போலிசார் எடுத்து சென்றார்கள். அந்த அட்டை பெட்டிகளில் ஆங்கிலத்தில் எழுதி இருந்ததால், அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது.

அப்போது என்னுடன் குணசேகரன் மற்றும் மாஸ்கோ என்பவர்கள் இருந்தார்கள். அந்த பெட்டியில் என்ன பொருட்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. மறுநாள் காலையில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரிவேண்டப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

06.09.2014 ஆம் தேதி தப்பி ஓடிய 3 நபர்களை தவிர பிடிபட்ட 3 நபர்களை திருவெறும்பூர் மது விலக்கு போலிசார் விசாரித்தபோது, அதில் ஒருவர் கலியபெருமாள்

மகன் அண்ணாதுரை என்றும், கோட்டப்பிள்ளை மகன் தர்மலிங்கம் என்றும், மேற்படி இருவரும் திருச்சி மண்ணச்சநல்லூர் தாலுகா, ராசம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்றும் மற்ற ஒருவர் விநாயகன் மகன் மணிகண்டன் என்றும் அவர் பாண்டிச்சேரி காட்டேரிகுப்பத்தை சேர்ந்தவர் என்றும் மேற்படி சம்பவத்தில் பிடிக்கப்பட்ட ஆம்னி, லாரி ஆகியவரை சோதனை செய்ததில் ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய 12 பாட்டில்கள் கொண்ட அட்டை பெட்டியில் 400 அட்டை பெட்டிகளும், BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட 750 ML 12 பாட்டில்கள் கொண்ட அட்டை பெட்டியில் 60 அட்டை பெட்டிகளும் ஆக மொத்தம் 460 அட்டை பெட்டிகளில் 5520 வெளி மாநில மதுபாட்டில்கள் இருந்தன என்றும் எனது போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக என்ன பொருட்கள் இருந்தது என்று தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி**

மாதிரி வரைடம் தயார் செய்வதற்கு போலிசார் அடுத்த நாள் காலை 11 மணிக்கு வந்து வரைபடம் தயார் செய்தார்கள். முதல் நாள் மாதிரி வரைபடம் தயார் செய்வதற்கு போலிசார் அங்கு வரவில்லை. மறுநாள் மதியம் தான் சரக்கு பாட்டில்கள் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது. வழக்கு பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

**ம.வி**- இல்லை

/signed/
கிருஷ்ணமூர்த்தி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.04.27 19:20:28 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி